எந்த ஒரு பள்ளியும் நீக்கப்பட வேண்டிய அவசியமில்லை என்று கூறியிருக்கிறார்கள். 1967-68-லே உதவி பெறும் பள்ளியிலே 98 பேர்களும் பஞ்சாயத்து யூனியன் பள்ளியிலே 114 பேர்களும் இருந்தார்கள். 1968-69-லே உதவி பெறும் பள்ளியிலே 46 பேர்களும் பஞ்சாயத்து யூனியன் பள்ளியிலே 165 மாணவர்களும் இருந்தார்கள் என்று கணக்கு இருக்கிறது. கல்வி இயக்குநர் இரண்டு பள்ளிகளும் இயங்கலாம் என்று அரசாங்கத்திற்கு யோசனை கூறியிருக்கிறார்கள்.

செஞ்சியிலே பெண்கள் ஆதாரப்பயிற்சிப் பள்ளி

*321. வினா—திரு. ரா. சா. முனுசாமி: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சியில் ஒரு பெண்கள் ஆசிரியர் ஆதாரப் பயிற்சிப் பள்ளி நிறுவும் உத்தேசம் ஏதேனும் அரசினர் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

வாலாஜாவிலுள்ள மகளிர் ஆதாரப்பயிற்சிப்பள்ளி

*322. வினா. திரு. கே. ஏ. வகாப்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆர்க்காடு மாவட்டம், வாலாஜாவிலுள்ள மகளிர்க்கான அரசினர் ஆதாரப்பயிற்சிப்பள்ளி, அதன் கட்டடம் நல்ல நிலையில்இல்லாததால் மூடப்பட்டு இருக்கிறதா?

(இ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுக்க உத்தேசித்துள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) பள்ளியின் கட்டிடம் நகராட்சிக்குச் சொந்தமானது. கட்டிடத்தைப் பழுது பார்க்க, இடத்தைக் காலி செய்து வேறு கட்டிடத்தில் பள்ளி இயங்குவதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. அவ்வாறு முடியாவிட்டால், பள்ளிக்கூடத்தை மூடுவது என்றும், அப்பள்ளி மாணவிகளை வேறு பள்ளியில் சேர்ப்பது என்றும் யோசனையில் இருந்து வருகிறது.

Mobile Hospital under Chittaranjan Das Memorial Scheme

*323 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether there is any proposal to start a Mobile Hospital in this State under the Chittaranjan Das Memorial Scheme; and

(b) if so, the details thereof?